**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தமபாளையம்.</u>**

முன்னிலை: திரு. P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 02 ம் நாள் வியாழக்கிழமை

**<u>Crl.M.P.No. 553/2026</u>**

**<u>in</u>**

**<u>Crl.M.P.No. 5931/2022</u>**

ரத்தீஸ்,
த/பெ. சுரேந்திரன் .... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர்.
கம்பம் வடக்கு காவல் நிலையம்,
குற்ற எண்.296/2022 .... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இந்நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள KL 13 C 5452 என்ற பதிவு எண் கொண்ட Mahindra Jeep வாகனத்தின் அசல் RC Book ஐ கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள 503 BNSS மனுவில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அழகுமலை, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை 2, அவர்கள் ஆஜராகியும், மனு இன்று விசாரணைக்கு வரப்பெற்று மனுவை சார்ந்த சகல ஆவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கிடும்–

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட KL 13 C 5452 என்ற பதிவு எண் கொண்ட Mahindra Jeep வாகனத்தினை மனு செய்து, மனு அனுமதிக்கப்பட்டு, வாகனத்தின் அசல் RC Book ஐ இந்நீதிமன்ற RPR.No.223/2022 ல் ஒப்படைத்து வாகனத்தை பெற்றுகொண்டுள்ளதாகவும். தற்போது வாகனத்திற்கு FC எடுப்பதற்காக வாகனத்தின் அசல் RC Book தேவைப்படுவதால் அதனை நிரந்தரமாக ஒப்படைக்குமாறு கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். வாகனத்தின் அசல் RC Book தன்னிடம் வழங்கும்பட்சம் நீதிமன்றம் விதிக்கும் உத்தரவுகளை ஏற்று நடப்பேன் என்றும், மேலும் மேற்படி அசல் RC Book ஐ தன்னிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட

வேண்டியது நியாயமாயும், அவசியமாயும் உள்ளது என்றும் தன்னிடம் ஒப்படைக்காமல் போனால் தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரும் இவ்வழக்கின் எதிரியும், வழக்கில் பெற்று சென்ற வாகனத்தின் உரிமையாளரும் ஒருவரே ஆவார் என்றும். மேலும் வழக்கில் சம்மந்தப்பட்ட KL 13 C 5452 என்ற பதிவு எண் கொண்ட Mahindra Jeep வானத்தின் RC Book ஐ மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு வாதங்களையும், வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து, இவ்வழக்கின் சொத்தான KL 13 C 5452 என்ற பதிவு எண் கொண்ட Mahindra Jeep வாகனத்தின் அசல் RC Book இந்நீதிமன்ற பாதுகாப்பில் உள்ளது என்பது புலனாகிறது. மேலும் மேற்படி வழக்கானது முடிவடைந்த நிலையில், வழக்கின் சொத்தினை மனுதாரர் பெற்றுக் கொள்ள உரிமைப்பட்டவர் ஆவார். ஆகையால் வழக்கிற்கு தேவைப்படும் பட்சத்தில் வாகனத்தையும், அசல் RC Book யும் நீதிமன்றத்தில் மனுதாரர் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும், அதற்கான உறுதிமொழி ஆவணம் சமர்பித்தும், மேற்படி வழக்கு சொத்தான KL 13 C 5452 என்ற பதிவு எண் கொண்ட Mahindra Jeep வாகனத்தின் அசல் RC Book ஐ மனுதாரர்/உரிமையாளர் வசம் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 02.07.2026-ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.07.02 20:10:23 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.